555

Regd. No. 3712.

ஸ்ரீ:

ஸ்ரீ மதேராமாநுஜாய நம:

# வகுளமாலை.

திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கத்தினின்று மாதந்தோறும்
வெளிவரும்
ஒரு தமிழ்ப்பத்திரிகை.

OFFICE OF THE REGISTRAR OF ...
19 MAY 1938
MADRAS.

"கண்ணன் கழலிணை
நண்ணும் மனமுடையீர்!
எண்ணும் திருநாமம்
திண்ணம் நாரணமே" — நம்மாழ்வார்.

"அகரமுதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு"
"தனக்குவமை யில்லாதான்றாள் சேர்ந்தார்க்கல்லான்
மனக்கவலை மாற்றலரிது" — திருவள்ளுவர்.

"உலகம் யாவையுந் தாமுளவாக்கலும்
நிலைபெறுத்தலு நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டுடையாரவர்
தலைவரன்னவர்க்கே சரணங்களே" — கம்பர்.

தொகுதி 2 } ஈசுவர ஹு மாசி மீ { பகுதி 2.
Vol. 2 } MARCH 1938. { No. 2.

## உள்ளுறை.

1. ஸ்ரீ அழகியசிங்கர் சதாபிஷேக மஹோத்சவம். — பத்திராசிரியர். — 9.
2. திருவாய்மொழி அநுபவம். — ஸ்ரீ உ., வே. எ. வி. கோபாலாசாரியார். — 12.
3. புகழுரை. — பதிப்பாசிரியன். — 14.
4. திருத்தாடாளன் பெருமை. — 15.

பத்திராசிரியர்:—
... கேசவய்யங்கார். M. A. B. L., அட்வகேட்.

... ஒன்று] [தனிப்பிரதி அணா ஒன்றரை

72
ஊ24, ஃ37வ்
ஃ38 . 2-2
20848

# சௌத் இண்டியன் ஸ்டோர்ஸ்,

திருவல்லிக்கேணி.

நேர்த்தியான மளிகை சாமான் நேராகத் தருவித்து செட்டு ரெம்பக்கம்மியாக்கி சீக்கிரத்தில் கொடுக்கிறோம்: நேரிலே மின்சாரத்தில் வறுத்தரைத்த காப்பியும், கடைந் தெடுத்த கட்டியான வெண்ணெயும் நறுமணத்த புத்துருக்கு மேன்மையான நெய்யும், குழையாத பழவரிசி வியன்மிக்க வழுதாகும், சீக்கிரத்தில் மாவு போல் குழைந்து போகும் ருசியான பருப்பும், பார்த்தவரும் கேட்டவரும் பரிவுடனே வாங்கிடுவார். மிக்க புகழ் பெயர் பெற்ற பரிமளப் பாக்கு சீராக வுடைத்து உயர்ந்த நல்ல வாசனைச் சரக்கு நெய் யுடனே சேர்த்து வேண்டு மட்டும் விற்கிறோம். இக்கடை யில் இடைவிடாது வாங்குவோர்க்கு இக்கட்டே இருக் காது. மிக்க பல முண்டாகும். நிரம்ப அறிவும் ஊறும்.

ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

# வகுளமாலை.

தொகுதி 2. | ஈசுவர ஹு மாசிமீ | பகுதி 2.

Vol 2. | MARCH 1938. | No. 2.

## ஸ்ரீ அழகிய சிங்கர் சதாபிஷேக மகோற்சவம்.

மங்கலமிலங்குமலர் மங்கைமணவாளச்
செங்கணெடு நங்கணரசிங்கனடிவாழும்
நங்களிறை யேறுபிறையாயிரநிரப்பும்
சங்கமெழு சந்தமிகுசங்கதமொலிப்பாம்.

மங்கலங்கட்கெல்லாம் மங்கலமாகும் ஸ்ரீசடகோபனது சேவடித்திருவாய்த்திகழ்ந்து சிறக்கும் நம்பேராசிரியச் செல்வராகிய ஸ்ரீவண் சடகோப ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹ சடகோபயதீந்த்ர மஹாதேசிகரது சதாபிஷேக மகோற்சவம் இம்மார்கழித் திருப்பூரட்டாதியன்று அரிமுகனுவக்க அவனது விபூதிகளால் நன்கு கொண்டாடப்பெற்று, அக்கொண்டாட்டமே பின்னும் பாவலராம் களிவண்டு மிழற்றிய கலம்பகமாய் மலர்ந்து மணம் கமழா நின்றுள்ளது. "ஸ்ரீ அழகியசிங்கர் சதாபிஷேக மலர்" என்றது அம்மலரின் திருநாமம். ஸ்ரீ அழகியசிங்கர் சதாபிஷேக மலருடன், ஸ்ரீ அழகியசிங்கர் அருள் மொழிகளுள் ஆறு பிரபந்தங்கள் வெளியிடப்பெற்றுள்ளன. ஏனைய பிரபந்தங்களும் கூடிய சீக்கிரம் வெளியிடப்பெறும். பாம் பொருளை இப்பேராசிரியர் அநுபவித்தவாறே பேசிய தூமொழிகளாதலான் இவை எம்மனோர்க்கின்றியமையாவாயின. தேனே மல

சென்னை 600 003

ரும் சேவடிச்செல்வனே அச்சிங்கன், தேனே ஒழுகும் தூமொழிச் செல்வரே இச்சிங்கர், இம்மெய்ம்மையை இவ்வருள்மொழி நன்கு விளக்கும். மொழியின் தூய்மையானும், யாப்பின் செறிவானும், ஓசையின் நயத்தானும், நடையின் தகவானும், அணியின் மிளிர்வானும், பொருளின் பொலிவானும், இரதத்தின் பொதிவானும், மதியின் நலத்தானும், இப்ப்ரபந்தங்கள் ஒப்புயர்வற்றனவென்றது ஓதியுணர்ந்தேதெளியற்பாலது. வேதபாதஸ்தவங்கள் வேதத்தை ஒக்கவே விளங்கா நிற்கின்றன. "தத்துல்யம் வேதசப்தேந" என்ற சங்கதவிலக்கணப்பெருமானாகிய காத்யாயநபகவர் பணிப்புக்கு இவ்வருண்மொழி இலக்காகத்தட்டில்லை. இப்ப்ரபந்தங்களினுழ் பொருணயத்தையும், இனிமையையும், தூய்மையையும், பெருமையையும், ஈண்டு விரிப்பிற்பெருகும். ஓதியுணர்க.

இத்தகைய இவ்வழகிய சிங்கர், ஸ்ரீ அஹோபில மட திவ்யாஸ்தாநத்தில் தாபதர் பெருமானாய்த் திகழ்ந்த ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹ திவ்ய பாதுகாஸேவக ஸ்ரீவண் சடகோப ஸ்ரீரங்கநாத சடகோப யதீந்த்ர மஹாதேசிகர் திருவருளால் இற்றைக்குப் பதினைந்து ஆண்டுகட்குமுன், நாற்பத்தோன்றாம் பட்டத்தில் முடிசூட்டுவிக்கப்பெற்று, சிங்கப்பிரானது செங்கோலைப் போர நடாத்திப் பொலியாநிற்கின்றார். சிங்கப்பிரானது பெருமையும், இந்நல்லாசிரியரது பெருமையும் ஒற்றுமைகொண்டவாற்றைக் குருமலர்க்கலம்பகத்தில் விரித்துள்ளோம். இம்மாலை வகுளமாலை. சிங்கப்பிரான் வகுளபாதுகன். இம்மடம் வகுளாபரணர் மடம். இப்பேராசிரியர் இன்று விளங்கிப்போரும் ஸ்ரீசடகோப ஸ்ரீ:. இம்முறையால் இம்மாதேசிகரது சதாபிஷேக மகோற்சவ நிகழ்ச்சி இம்மாலையில் விரிக்கப்பெறுதல் பெரிதும் பொருத்தமுடைத்தேயாம். தெள்ளிய நம் சிங்கப்பிரானது திருப்பாதுகமாயே நம்மாழ்வார் அமர்ந்து விளங்கும் சீர்த்தியை அவ்வாழ்வார் தாமே "அப்பொன்பெயரோன் தடநெஞ்சம் கீண்ட பிரானார் தமதடிக்கீழ் விடப்போய்த்திட நெஞ்சமாய் எம்மை நீத்து இன்றுதாறும் திரிகின்றதே" என்று அருளியுள்ள திருவாக்கின் மான்மியத்தால், இன்றுகாறும் அப்பொன் பெயரோன் தடநெஞ்சம் கீண்டபிரான் தானே, ஸபாதுகனைப்

புள்ளூர்ந்துலகு கொள்ளத்திரிதந்தருளா நின்றுள்ளான் என்றது ஆன்ரோர் தெளிவு. இச்சிங்கப்பிரானே எம்பெருமானர் திருப்பாடியத்துக்கு விடயம் என்றதை சதாபிஷேக மலரில் விளக்கியுள்ளோம். எம்பெருமானர் திருவுள்ளத்துறையும் திருத்தேவே சிங்கப்பிரான் என்றதை "வளர்ந்த வெங்கோப மடங்கலொன்ருயன்று வாளவுணன் கிளர்ந்த பொன்னுகம் கிழித்தவன் கீர்த்திப்பயிரெழுந்து விளைந்திடுஞ் சிந்தையிராமாநுசனென்றன் மெய்வினை நோய்களைந்து மெய்ஞ்ஞானமளித்தனன் கையில் கனியன்னவே" என்ற இராமாநுச நூற்றந்தாதித் திருப்பாசுரம் சாலவிளக்கும். "அழகியசிங்கருடைய கீர்த்தியாகிற பயிர் நித்யாபிவ்ருத்தமாய் லோகமெல்லாம் வ்யாபித்து பலபர்யந்தமாகும்படிக்கீடான வீரத்தையுடைத்தான திருவுள்ளத்தை யுடைத்தான எம்பெருமானர், இவர்க்கு அழகியசிங்கர் திருவாராதநமாகையாலே இப்படி அருளிச்செய்கிருர்" என்ற இற்றைக்கு ஐந்நூறு ஆண்டுகட்குமுன் விளங்கிய ஸ்ரீபிள்ளைலோகார்யஜீயர் வ்யாக்யாநம் இங்கண் நன்கு நோக்கத்தக்கது. ஈதே எதிராசர் ஒப்பற்ற கீர்த்தியாகும். இக்கீர்த்தி மையையே "நம்தலைமிசையே பொங்கிய கீர்த்தி இராமாநுசனடிப்பூமன்னவே" என்று பின்னும் அமுதனர்தாமும், "விஷ்வக் வ்யாபிந்யகாதே யதிநருபதியசஸ்ஸம் பதேகார்ணவே ஸ்மிந்ச்ரத்தாசுத்தாவகாஹை: சுபமதி பிரஸெளவேங்கடேசோபிஷிக்த:" என்று ஸ்ரீநிகமாந்த மகாதேசிகனும் நன்கு விளக்கி அருளிச்செய்துள்ளார்கள். "க்ருபேஷிம்ஹ க்ஷமாப்ருத்க்ருதமுக சமத்காரகரண" என்றும், "ம்ருகபதிகிரெள விச்வமாப்யாயந்தீ சிலோபஞ்ஞும் க்ஷாரதிபவதீ சீதலம் ஸத்குணெளகம்" என்றும் தேசிகனர் இப்பொருளையே பின்னும் விரித்தருளினர். இத்திறத்தூமொழிகளை அடியொற்றியே "கலைகளார் மறையுருக்கொள் கலுழன்மேற் சரணம் பூக்கும் நலமெலாம் நிலமுலாவி நம்தலைமிசையே பெய்யத்திலதமாமுலகுக்கெல்லாம் சிங்கவேள் குன்றமொன்றிக்குலமுறை செழிக்கும் கோப்பாய்க்குருநிரை வளர்ப்பான் சிங்கன்" என்று அம்மலரில் குறிப்பிட்டுள்ளோம். இவ்வாற்ருல் இம்மடத்தில் முடிசூட்டப்பெற்ற பேராசிரியரனைவரும் ஸ்ரீசடகோப யதீந்த்ர மகாதேசிகர்களாய்ப்

பொலியா நிற்பர்.

இத்தகைய பெருமைவாய்ந்த இச்சிங்கப்பிரான் திவ்யாஸ்தா நத்தில் அன்னவனாலேயே சதாபிஷேகமும் அருளப்பெற்ற திவ்ய ராய் விளங்கும் ஸ்ரீவண் சடகோப ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ சடகோப யதீந்த்ர மகாதேசிகராகிய இந்த ஸ்ரீ அழகியசிங்கருக்குப் பல்லாண் டேபல்லாண்டும் பாடுவோமாக. ஸர்வம் சுபம்.

வாழிநரசிங்கர் திருவாழிசடகோபர்
வாழியெதிராசருயர் தேசிகரும்வாழி
வாழைபடிவாழையெனு மெம்மடிகள்வாழி
வாழிநரசிங்க சடகோபகுரு வாழி.

பத்திராசிரியர்.

———:(o):———

# திருவாய்மொழி அநுபவம்.

(முன்தொடர்ச்சி.)

அர்ஜுனனுக்கு ஸகல சிதசித் விசிஷ்டமான தம் விச்வரூபத் தைக்கண்ணன் காட்டியருளியது போல, அசேஷசிதசித் ப்ரகார மான ஒரு தத்வமான உபய விபூதி வசிஷ்ட ஸ்வரூபத்தை ஸகல திவ்ய மங்கள விக்ரகங்களோடும் கூடி ஆழ்வாருக்குப் பெருமாள் திவ்யசக்ஷுः ப்ரதான பூர்வகமாக ஸேவைதந்து, தாம் அநுபவித்த வாறு ஆழ்வார் பாடுகிறார். இந்த முதல் திருவாய்மொழியில் 'ஐத தாத்ம்யம் இதம் ஸர்வம்' என்றபடி ப்ரஹ்மமென்னும் விச்வாத்மா ஸர்வ சரீரகனாய் வ்யாபித்து நிற்கும் வைச்வ ரூப்யத்தை (ஸார் வாத்ம்யத்தை) யநுபவிக்கிறார். 'ஸ்வாயத்தாசேஷ ஸத்தாஸ்திதி யதந பிதா வைபவாத் வைச்வரூப்யாத்' என்று தாத்பர்ய ரத்நாவளி காட்டினபடியும், 'உடன்மிசையுயிரெனக் கரந்தெங்கும் பரந்து ளன்' 'பரந்து தண் பரவையுள் நீர்தொறும் பரந்துள்ள' என்று ஸார்வாத்ம்யத்தையும் 'ஸர்வதத்வேஷு பூர்த்தே:' என்றபடி ஸர்வ தத்துவங்களிலும் பூர்ண சக்தியோடிருப்பதையும் இத்திருவாய்

மொழி விளக்குகிறது. ஆழ்வாருக்கு ஸாக்ஷாத்கார விஷயமான 'ஜகாத்ம்ய்ப்ரத்யயஸாரமான' விசிஷ்டாத்வைத தத்துவமே முதல் திருவாய்மொழியில் ஆழ்வார் கண்டவாறே பேசப்பட்டது. தாம் பகவதநுக்ரஹத்தால் தர்சித்ததையே நமக்கு தர்சிப்பிக்கிறார்; நேரில் காண்பதுபோல் தெளிவாக காணச்செய்கிறார். 'தமஸ: பாரம் தர்சயதி பகவான் ஸநத்குமார:' என்பது போல் 'பச்யன் யோகீபரம்' என்று ரத்நாவளியில் முதலில் ஆழ்வார் நேரில் தர்சித்ததைப்பேசி, முடிவில் 'தர்சயன் முக்திமாப' என்று நமக்கு ஸநத்குமாராதிகளைப்போல் காணுமாறு காட்டுவதைக் காட்டப்பட்டது. அர்ஜுனன் பகவானுடைய விச்வரூபத்தைக்கண்டதும் 'தேவனே, உமது தேஹத்தில் எல்லாத் தேவரையும், எல்லா ப்ராணிக் கூட்டங்களையும், ப்ரஹ்ம தேவரையும், ஈச்வரரையும் பார்க்கிறேன். விச்வரூபரே, விச்வேச்வரரே, எங்கும் எண்ணிறந்த, தோள்கள், உதரங்கள், முகங்கள், கண்களோடு கூடியவராய், ஆநந்தரூபராய், ஆதி, மத்யம், அந்தமில்லாதவராய் (உம்மை) ஸேவிக்கிறேன்' என்றான். ஆழ்வாரும் முதலிலேயே அப்படியே பேசுகிறார். 'புரமொரு மூன்றெரித்தமர்க்கு மறிவியந்தரையனென வுலகமைத்துளனே' என்று இங்கும் 'வலத்தனன் திரிபுரமெரித்தவனிடம் பெறத் துந்தித்தலத்தெழுதிசைமுகன் படைத்த நல்லுலகமும் தானும் புலப்பட' 'மாகத்திளமதியம் சேரும் சடையானைப் பாகத்துவைத்தான்' என்று நடுவிலும் 'முனியே நான்முகனே முக்கண்ணப்பா' என்று முடிவிலும் 'ப்ரஹ்மாணம் ஈசம் கமலாஸனஸ்தம்' என்ற அர்ஜுனனைப்போலவே யநுபவித்துப் பேசுகிறார். ரத்நாவளியும் 'த்ர்யக்ஷப்ரஹ்மாத்மபாவாத்' என்று முதல் ச்லோகத்திலும் 'ப்ரஹ்மேசாந்த: ப்ரவேசாத்' என்று முடிவு ச்லோகத்திலும் இந்த அநுபவமவிச்சின்னமாயோடுவதைக் காட்டிற்று 'வைச்வரூப்யாத்' என்று விச்வரூபக்காக்ஷியை முதல் ச்லோகத்திலேயே காட்டிற்று. அர்ஜுனனுக்கிருந்த நிரதிசய திப்தஜ்யோதிரநுபவமும் இங்கே 'சுடரடி' என்பதால் காட்டப்பட்டது. 'சோதீ, தோள்களாயிரத்தாய் முடிகளாயிரத்தாய்த்துணை மலர்க்கண்களாயிரத்தாய்' என்பதும் விச்வரூபாநுபவம். 'ஏகஸ்த்தம் பச்யத்' என்றதுபோல 'இல்லதுமுள்ளதுமல்லதவனுரு, என்ற அநுபவம். 'உம்முடைய அருளா

லேமோஹம்போயிற்று; ஞானம்பெற்றேன்; ஸந்தேகங்கள் நீங்கின’
என்றான் அர்ஜுனன். ‘மயர்வற மதிநலமருளினன்’ என்று இங்
கும் அதே பேச்சு. ‘சித்யந்தே ஸர்வஸம்சயா: க்ஷீயந்தே சாஸ்யகர்
மாணி தஸ்மின் த்ருஷ்டே பராவரே என்ற ச்ருதிகாட்டும் அநுபவ
மே இப்பாசுரத்திலநுபவ விஷயம். பரர்களான நித்ய முக்தர்களும்
யாருக்கு சேஷரோ அவர் பராவரர். ‘பரம்பரம்பரனை’ என்று
பத்தாம் பத்தில் சார்வே தவநெறியில் இருதறம் பேசினதும் ‘தஸ்
மின் த்ருஷ்டே பராவரே’ என்ற ச்ருதியை நினைப்பதாகும். பர
ரான ப்ரஹ்மேந்திராதிகளுக்கும் பரரான நித்ய ஸூரிகளுக்கும் பர
னான அதிபதி என்று பரம் பரம் பரன் என்பதற்குப்பொருள்.

(தொடரும்)

**ஏ. வி. கோபாலாசாரியர்.**

# புகழுரை.

ஸ்ரீ அஹோபிலமட திவ்ய ஆஸ்தானத்தில் நாற்பதாவது
பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீலக்ஷ்மீ
ந்ருஸிம்ஹ திவ்யபாதுகாஸேவக ஸ்ரீவண் சடகோப ஸ்ரீரங்கநாத
சடகோபயதீந்த்ர மஹா தேசிகர் “புகழ்மாலை” வரப்பெற்றோம்.
இஃது நிகழும் ஈச்வர வருஷம் தைமாசம் பதினைந்தேதி ஸ்ரீ அழகிய
சிங்கர் பதினைந்தாவது மஹாராதநத்தன்று (29-1-38) பிரசுரம்
செய்யப்பட்டதாக அறியப்படுகின்றது. நம்சங்கக்கமிட்டி மெம்
பர் ராவ்சாஹிப் கமலாபுரம் ஆர். இராமஸ்வாமி ஐயங்காரவர்கள்
“விஞ்ஞாபனம்” என்ற மகுடமிட்டு முன்னுரை வரைந்துளார்கள்.
இது வெகு அழகிதாய் அமைந்துள்ளது. இம்மாலையில் வட
மொழி, தென்மொழி, ஆங்கிலம் என்ற முப்பாஷைகளில் ஸ்ரீ
அழகியசிங்கரின் குணாநுபவம் செவ்வையாக நடத்தப்பட்டிருக்
கின்றது. இவ்வகுளமாலைப் பத்திராசிரியர் ‘இங்கணே வருக முந்தி
யென்றெமை யேவியன்பால், தங்கணேயாக வெண்ணித்தன் படை
யெம்முதற்று, யங்கணே சின்னமென்ன வருளினான்’ என்று கூறு

மாற்றதால் இவ்வழகிய சிங்கரிடம் இவருக்குள்ள ஈறிலாப்பத்தி வெள்ளத்தைச் சற்றே காண்கலாம். இதனை இம்மாலையின்கணுள்ள "ஸ்ரீ அழகியசிங்கர் வைபவத்தை" நன்கோதித்தெளிக. "ஸ்ரீ அழகியசிஙகரின் ஆசார்ய பக்தியும் ஸமரஸமும்" என்ற கட்டுரை சுருக்கமாய் அநுபவகனரஸத்துடன் கூடி நிற்கின்றது "ஸ்ரீ அழகியசிங்கரின் தனியன்" என்ற வியாஸம் மிக ஆழ்பொருளை அடக்கிக்கொண்டிருக்கிறது. ஸ்ரீ அழகியசிங்கரால் அநுக்ரஹிக்கப்பட்ட கிரந்தங்களை நன்கு பரவச்செய்து பரிபாலிப்பதே நமக்கு வகுத்த கடமையாகும். இதுபோன்ற புகழ்மாலைகள் அடிக்கடி இடைவிடாது வரப்பார்ப்பதே ஸ்ரீ அழகியசிங்கர் அடியார்கள் செய்யவேண்டுவது. ஆசார்ய கைங்கரியமே அழகுடைத்து. இதை இனுமாக வழங்கியது மிகவும் கொண்டாடத்தக்கது. வேண்டுவோர் ஸ்ரீ உப வே காருகுரிச்சி வங்கீபுரம் கே. டி. சுந்தரராஜாசார்யர், பி. ஏ. எல். டி., 34, தம்பு செட்டி தெரு, ஜார்ஜ் டவுன், சென்னை, என்ற விலாசத்திற்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

பதிப்பாசிரியன்,

வகுளமாலை.

———:(o):———

# *திருத்தாடாளன் பெருமை

## அல்லது ஸ்ரீ வாமன வைபவம்.

("வகுளமாலை" தொ. 2; ப. 1; பக்கம் 6-ந்தொடர்ச்சி)

[த்ராமிட ப்ரஹ்ம பாவஞ்ஞாம் தந்திர்பர ஸூபாஷணம்। சாந்தாம்மே மாதரம் வந்தே லக்ஷ்மீம் பதிமநுவ்ரதாம்॥ ஸ்ரீவத்ஸ வம்ச கலசாப்தி ஸூதாம்சு மீட்யம் நித்யம் சடாரி குரு தத்தகலா ப்ரபூர்ணம்। ஸ்ரீமந் ந்ருஸிம்ஹமய விஷ்ணுபதா ச்ரயம மே சேஷாத்ரி தேசிக வரம் பிதரந்தமீடே॥]

திருமங்கை மன்னனும் கொற்றவேலவர் சீர்காழியம்பதியை

---

*குருச்சி சே. ஸ்ரீநிவாஸ வேதாந்தாசார் ஸ்வாமி, எம். ஏ., எல். எல். பி., செய்த சொற்பொழிவின் சுருக்கம்.

அணுகுகிறார்; "நாலுகவிப் பெருமாள் வந்தார்! நம் கலியன் வந்தார்! ஆலிநாடர் வந்தார்! அருள்மாரி வந்தார்! மங்கை வேந்தர் வந்தார்! பரவாதி மத்தகஜ கண்டீரவர் வந்தார்! பரகாலர் வந்தார்! நீலநிறத்து நிமலர் வந்தார்!" என்றவாறு இவருடைய பல சிறப்புப்பெயர்களை முழங்கிக்கொண்டு இவரடியார்கள் இவரைப்பின் தொடர்ந்தனர். இதைக்கண்டு திருமாலாரும், அவரடியவர்களும், "நாடெங்கும் வாழக்கேடொன்றுமில்லை" யென்ற நல்லெண்ணமுடைய ஏனையோரும் பெரிதும் களித்தனர். ஆனால் "காக்கைக்குத் தன்குஞ்சு பொன்குஞ்சு" என்ற கணக்கில் 'இது ஒரு தலையன்பின் மேலீட்டின் விளைவு' என்று சிலர் கருதலாமென்று திருமாலார் அஞ்சினார் போலும்! எனவே தமது வேறு வடிவங்களை வழிபடும் பெரியார் ஒருவர் ஆழ்வாரைப் பந்தயத்திற்கு அறைகூவி அழைக்கும்படி திருமாலார் அவரைத் தூண்டினர். "ஈன்றபொழுதிற்பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோனெனக் கேட்ட தாய்"! பிறரும் ஆழ்வாருடைய கல்விகேள்வி நிறைவுக்கு மெச்சவேண்டுமென்பதுதான் திருமாலாரின் திருவுள்ளம்.

'கடவுள் வழிபாட்டிலேயே நோக்கமுள்ள பெரியார் இப்படிப்பட்ட போட்டிகளிலும் சொற்போர்களிலும் கலந்துகொள்ளலாமா?' என்று சிலர் ஐயுறலாம். இதைப்பற்றி எனதருந்தந்தை பின்வருமாறு கூறுவர். "மாறுபடும் கடவுள் கொள்கைகளெல்லாம் திருமாலாரின் விளையாட்டே; அக்கொள்கைளைப்பற்றிய போட்டிகளும் சொற்போர்களும் ஒருவகை விளையாட்டென்றே அறிவு முதிர்ந்தோர் நினைத்தல்வேண்டும். ("பால்யேன திஷ்டாஸேத்") என்று திருமறைமுடியில் ஓதப்பட்டிருக்கிறது; அதாவது, கல்வி கேள்விகளினால் நிறைந்து கடவுள் வழிபாட்டையே பொழுதுபோக்காகக்கொண்ட துறந்தார்வேந்தர் தாமும் ஒருவழி இளமையில் நிலைத்திருத்தல்வேண்டும்; அவ்விளமையாவது, இவர்கள், தங்களுக்குப்பிறப்பு, கல்வி முதலியவைகளால் ஏற்பட்டுள்ள பெருமையைத் தாமே சிறிதும் வெளியிடாதிருத்தல்; இந்நிலைக்கு உற்ற விளையாட்டு கொள்கையாராய்ச்சிதான்; அதை யொருவர்க்கொருவர் மிகுந்த அன்புடனும், ஒழுங்குடனும், பணிவுடனும், இளைஞர்கள்

'கிட்டிப்புள்' முதலியன விளையாடுவதுபோல், நடத்தல்வேண்டும். திருநீக்கப்பட்டார் சிலர் இதை ஒரு விரகாகக்கொண்டு ஒருவரை யொருவர் தோன்றியபடி தாக்குவதும் புண்படுத்துவதும், அவர் களின் ஒழுங்கின்மையையே காட்டும். மேலும், வேந்தர் என்ற முறையில் துறந்தார்வேந்தர் தமக்கும் ஒரு போர் வேண்டுமே !

ஆனால் இவ்வாராய்ச்சிப் போர்க்களத்தில், — இங்கு அறிவு நிறைந்த செஞ்சொற்களாம் நெற்கதிர்களைப் போர் போராகக் குவித்து வைப்பதால் இதை இப்படியும் ஒரு "போர்க்களம்" என்று கூறத்தட்டில்லை—, சொற் போரில் (சண்டையில்) தோற்றவர், தம் மைத் தோற்கடித்தவரின் அடி பணிந்து அவருடைய இன்னருளால் பேரறிவு பெற்று, அவர் அரியணைமீது தாமே அவர்க்குப்பிறகு வீற் றிருந்து அறச்செங்கோல் தாங்கி எங்கும் வெற்றி பெறுவதுதான் விந்தை. இதற்கு எடுத்துக்காட்டாக, திருமாலடியார் தம் நற்குர வரில் ஒருவராக விளங்கிய பகவான் திரு பராசரபட்டரின் மாணக் கராகிய திரு நஞ்சீயர் வரலாற்றைக் கூறலாம்." பொது மக்களி டையே அறிவு வளர்ச்சிக்கு இச்சொல் போர்கள் இன்றியமையாத கருவிகளாய் இருந்திருக்கின்றன.

எனவே கொற்றவேலவர் பந்தயத்திற்கு அழைக்கப்பட்டதும் அவர் அதில் கலந்துகொண்டதும் பொருத்தமானவைகளே. அவ ருடைய வெற்றி திருமாலார் செயல்.

[ஸ்ரீகுருப்யோ நம:]

ஸ்ரீ:

# திருவல்லிக்கேணித்தமிழ்ச் சங்கம்.

**சங்க வித்வான்கள்.**
1. ஸ்ரீ உபவே தில்லையம்பூர் வெங்கடாசார்ய ஸ்வாமி.
2. ஸேது ஸமஸ்தான வித்வான் ஸ்ரீ உபவே ஆர். ராகவய்யங்கார் ஸ்வாமி.
3. ஸ்ரீ உபவே மு. ராகவய்யங்கார் ஸ்வாமி.
4. ஸ்ரீ உபவே. ஸ்ரீரங்கம் சடகோபாச்சாரிய ஸ்வாமி (மாம்பலம்).

**தலைவர்** ... ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்காரவர்கள்.

**உப தலைவர்கள்.** ...
1. ஸ்ரீமான் வி. நரஸிம்மாசாரியாரவர்கள்.
2. ,, ஆர். சந்தாநகிருஷ்ணய்யங்காரவர்கள்.
3. ,, யஸ். லக்ஷ்மி நரஸிம்மாசாரியாரவர்கள்.

**காரியதரிசியும், பொக்கிஷதாரரும்.** ஸ்ரீமான் ப. ரெ. திருமலை ஐயங்கார்.

**கமிட்டி மெம்பர்கள்.**
1. ஸ்ரீமான் ராவ் சாஹிப் ஆர். இராமசாமி ஐயங்காரவர்கள்.
2. ,, யஸ். கிருஷ்ணஸாமி ஐயங்காரவர்கள்.
3. ,, டி. ஆர். ஸ்ரீநிவாஸய்யங்காரவர்கள்.
4. ,, ஏ. வெங்கடாசாரியாரவர்கள்.
5. ,, வி. ஷண்முகசுந்தர முதலியாரவர்கள்.
6. ,, யஸ். குமாரசாமி செட்டியாரவர்கள்.
7. ,, இ. கே. சபாபதி முதலியாரவர்கள்.

**காரியாலயம்** ... 42-ஏ. வெங்கடரங்கம் பிள்ளை தெரு, திருவல்லிக்கேணி.

**முக்கிய நோக்கங்கள்.**
1. தமிழைப் பரவச் செய்தல்.
2. வாரந்தோறும் திருக்குறள் கம்பராமாயணம் முதலிய தமிழ் வகுப்புகள் இலவசமாக நடத்தல்.
3. தமிழ்ப் பெரியார் ஜன்ம தினங்களை கொண்டாடல்.
4. தமிழ் வித்வான் பரீக்ஷைக்குப் போகுமவர்களுக்கு வேண்டிய ஒத்தாசை செய்தல்.
5. சங்கவெளியீடாக ஒருபத்திரிகை நடத்தல்.
6. பிராசீனசம்ப்ரதாய முறைகளைக் காப்பாற்றத்தக்க ஏற்பாடு செய்தல்.
7. புலவர்களைப் போற்றுதல்.
8. திரு நாட்களை நன்கு கொண்டாடல்.

ப. ரெ. திருமலை ஐயங்கார்,
காரியதரிசி.

Printed at the Lakshmi Kaatha Press, 405, High Road, Triplicane and
Published by P. R. Tirumalai Ayyangar at 42-a, Venkatrangam Pillai St., Triplicane, Madras.